<table>
<tr><td colspan="2">DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai</td></tr>
<tr><td colspan="2">Date: 11.06.2026</td></tr>
<tr><td colspan="2">CC No.54 /2026</td></tr>
<tr><td colspan="2">சாட்சி :PW1</td></tr>
<tr><td>பெயர் : திருமதி. லட்சுமி</td><td>ஜாதி :</td></tr>
<tr><td>த/பெ/க/பெ. : திரு. சடையன்</td><td>தொழில் : கூலி</td></tr>
<tr><td>கிராமம் : சே.முத்தமடைப்பட்டி</td><td>சமயம் :</td></tr>
<tr><td>தாலுக்கா :</td><td>வயது : 43/2026</td></tr>
<tr><td colspan="2">( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்)</td></tr>
</table>

---------------------------------------------------------

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்தில் இறந்த சடையன் எனது கணவர் ஆவார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகாரை நான்தான் கொடுத்தேன். 17.04.2025 அன்று காலை 07.50 மணியளவில் எனது கணவர் சடையன் திண்டுக்கல்லுக்கு பூ கொண்டு செல்வதற்காக நடந்து சென்றார். அவர் திண்டுக்கல் – திருச்சி சாலையில் ராஜேந்திரன் கடைக்கு முன்பு நடந்து சென்றுகொண்டிருந்த போது கிழக்கு நோக்கி வந்த கார் அதிவேகமாக கண்ட்ரோல் இல்லாமல் எனது கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. எனது கணவருக்கு நெற்றி, கால் உள்ளிட்ட பகுதிகளில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அந்த கார் TN 38 DL 2025 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு கலர் கார் நிற்காமல் எனது கணவர் மீது மோதி சென்றுவிட்டது. அந்த காரை டோல்கேட்டில் சிசிடிவி கேமராவில் பார்த்து பிடித்தார்கள்.

2. நாங்கள் எதிரியிடம் கேட்ட போது பிரேக் பிடிக்காததால் மோதிவிட்டதாக கூறினார். மோதி விபத்து ஏற்படுத்திய நபரை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். அவர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. விபத்திற்கு காரணமாக கார்

கோயம்புத்தூரை சேர்ந்த வாகனமாகும். காயமடைந்த எனது கணவரை நானும், கண்ணுச்சாமி மற்றும் வீரமலை உள்ளிட்டோர் சேர்ந்து அவரை மீட்டு ஆம்புலன்சில் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் எனது கணவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். இது குறித்து நான் புகார் அளித்தேன். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இறந்து போன எனது கணவர் உடல் மீது வையம்பட்டி போலீசார் விசாரணை நடத்தினார்கள். நான் உடன் இருந்து அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

( எதிரிகள் ஆஜர் இல்லை, வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய போதி வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 11.06.2026 | |
| CC No.54 /2026 | |
| சாட்சி :PW2 | |
| பெயர் : திரு. கண்ணுச்சாமி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சின்னு | தொழில் : கூலி |
| கிராமம் : சே.முத்தமடைப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 48/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

------------------------------------------------------------

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.1 லட்சுமி மற்றும் விபத்தில் இறந்த சடையன் ஆகியோர் எனது பக்கத்துவீட்டுக்காரர் ஆவார். 17.04.2025 அன்று காலை சுமார் 07.40 மணியளவில் நான் எனது வீட்டிற்கு பின்னால் குடிதண்ணீர் பிடித்து கொண்டிருந்தேன். அப்போது சடையன் திண்டுக்கல்லுக்கு பூ கொண்டு செல்வதற்காக நடந்து சென்றார். அவர் திண்டுக்கல் – திருச்சி சாலையில் ராஜேந்திரன் கடைக்கு முன்பு சாலையை கடந்து நடந்து சென்றுகொண்டிருந்தார், சத்தம் கேட்டது, அவர் வடபுறத்திலிருந்து தென்புறம் ரோட்டை கிராஸ் செய்தார். அப்போது சிவப்பு கலர் கார் மேற்கிலிருந்து கிழக்காக வந்த சிவப்பு நிறக்கார் அதிவேகமாக கண்ட்ரோல் இல்லாமல் சடையன் மீது மோதி விபத்து ஏற்பட்டது. சடையனுக்கு நெற்றி, கால், முகம் உள்ளிட்ட பகுதிகளில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அந்த கார் TN 38 DL 6005 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு கலர் கார்தான் மோதியது, தொடர்ந்து நானும், வீரமலை, லட்சுமி ஆகிய மூவரும் சடையனை மீட்டோம்.

2. மோதி விபத்து ஏற்படுத்திய நபரை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். அவர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. விபத்திற்கு காரணமாக கார் கோயம்புத்தூரை

சேர்ந்த வாகனமாகும். காயமடைந்த சடையனை மணப்பாறை மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் சடையன் இறந்துவிட்டதாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

( எதிரிகள் ஆஜர் இல்லை, வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய போதி வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 11.06.2026 | |
| CC No.54 /2026 | |
| சாட்சி :PW3 | |
| பெயர் : திரு. வீரமலை | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. வெடிக்காரநல்லான் | தொழில் : கூலி |
| கிராமம் : சே.முத்தமடைப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 54/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---------------------------------------------------------------

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.1 லட்சுமி மற்றும் விபத்தில் இறந்த சடையன் ஆகியோர் எனது ஊரைச்சேர்ந்தவர் ஆவார். 17.04.2025 அன்று காலை சுமார் 07.40 மணியளவில் நான் ராஜேந்திரன் கடை அருகே இருந்தேன். அப்போது சடையன் திண்டுக்கல்லுக்கு பூ கொண்டு செல்வதற்காக நடந்து சென்றார். அவர் திண்டுக்கல் – திருச்சி சாலையில் ராஜேந்திரன் கடைக்கு முன்பு சாலையை கடந்து நடந்து சென்றுகொண்டிருந்தார், சத்தம் கேட்டது, அவர் வடபுறத்திலிருந்து தென்புறம் ரோட்டை கடந்து சென்றார். அப்போது சிவப்பு கலர் கார் மேற்கிலிருந்து கிழக்காக வந்த சிவப்பு நிறக்கார் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பிரேக் பிடிக்காமல், கண்ட்ரோல் இல்லாமல் சடையன் மீது மோதி விபத்து ஏற்பட்டது. சடையனுக்கு நெற்றி, கால், முகம் உள்ளிட்ட பகுதிகளில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அந்த கார் TN 38 DL 6005 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு கலர் கார்தான் மோதியது, தொடர்ந்து நானும், கண்ணுச்சாமி, லட்சுமி ஆகிய மூவரும் சடையனை மீட்டோம்.

2. மோதி விபத்து ஏற்படுத்திய நபரை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். அவர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. விபத்திற்கு காரணமாக கார் கோயம்புத்துாரை சேர்ந்த வாகனமாகும். காயமடைந்த சடையனை மணப்பாறை

மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் சடையன் இறந்துவிட்டதாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

( எதிரிகள் ஆஜர் இல்லை, வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய போதி வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.